37

GAZETTEER UNIT
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8
10 MAY 1962
18-4-62

# தொழில் மயமாக்குவோம்





நமது சாதனைகள்



விலை : 5 காசுகள்

# முன்னுரை

சுதந்திர அரசாங்கத்தின் தொழில் கொள்கை தெளிவானது. அது பெரிய—சிறு ரக—கிராமக் குடிசைத் தொழில்கள் ஆகிய அனைத்தையும் தழுவியது. தனியார் துறையின் கீழ் பெரிய தொழில்கள் நிர்மாணிக்கப்படுவதை அது ஊக்குவிக்கிறது. வளர்ந்த குழந்தையைப் பற்றிக் கவலைப்படாமல்—நலிந்த குழந்தையை வளர்ப்பதில் மட்டும் அது நாட்டம் செலுத்துவதில்லை. அதாவது பெரிய பெரிய கனரகத் தொழில்களை ஆரம்பித்து, அவைகள் ஸ்திரப்பட்டவுடன், அவைகளை அப்படியே விட்டுவிட்டு குடிசைத் தொழில்களை மட்டும் நாம் அபிவிருத்தி செய்யவில்லை. வளர்ந்துவிட்ட தொழில்களை மேலும் வளர்த்துக்கொண்டு, புதிய புதிய தொழில்களையும் உருவாக்கிக்கொண்டு தமிழ்நாடு தொழில் துறையில் வெற்றி நடை போடுகிறது. இவ்வளவும் சுதந்திரத்திற்குப் பின் ஏற்பட்ட அபிவிருத்தியாகும். இந்த அபிவிருத்திகளை மக்கள் அறிந்துகொள்ளுமாறு செய்வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சியே இந்த நூல்.

நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை.


62
13-4-62

# அன்றும் இன்றும்

ஒரு நாட்டின் பொருளாதாரக் கட்டுக்கோப்பு இரு அஸ்திவாரங்களின்மேல் நிற்கிறது. ஒன்று வேளாண்மை; மற்றொன்று தொழில். வாழ்க்கையை உருவாக்குவதற்கு வேளாண்மை அடிப்படையாக இருப்பதுடன் வேளாண்மையே ஒரு நாட்டிற்கு முதுகெலும்பாக விளங்குகிறது. இந்த அடிப்படைப் பொருளாதாரத்தை வளர்த்து — சமுதாயத்தில் பரவலான பொருளாதார உயர்வை உண்டாக்குவது தொழில்களேயாகும். தொழில்கள் என்று சொல்லும்பொழுது அதில் பல கூறுகள் அடங்கியிருக்கின்றன. ஆனால் அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று பெரிய தொழில்கள், இரண்டாவது சிறு தொழில்கள், மூன்றாவது கிராமக் குடிசைத் தொழில்கள்.

நம் தமிழ் நாட்டில் இம்மூவகைத் தொழில்களும் உள்ளன. பெரிய யந்திரங்களைக் கொண்டு இயங்கும் பெரிய தொழில்களை ஒருபுறத்தில் பார்க்கிறோம். அடுத்து, சில மனிதர்கள் ஒரு சிறு தொழிற்சாலையில் சில கருவிகளை வைத்துக்கொண்டு வேலை செய்வதையும் பார்க்கின்றோம். மூன்றாவதாக, இந்த யந்திரங்கள்—கருவிகள் எதுவுமின்றி கிராமப் புறத்தில், மர நிழலில் ஒரு மனிதன் தன்னந் தனியனாக அமர்ந்துகொண்டு தொழில் செய்வதையும் பார்க்கின்றோம். தொழில்கள் என்னும் வற்றாத நதியின் கிளை நதிகளே இவை.






சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நம் தமிழ் நாட்டில் இந்தத் தொழில்கள் இருந்தனவா? அல்லது இப்போதுதான் ஏதோ ஒரு மாயா ஜாலம் போல் இந்தத் தொழில்களெல்லாம் ஏற்பட்டனவா?—என்றால் இரண்டுக்கும் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டும். ஏனென்றால் அப்போதும் இந்தத் தொழில்கள் இல்லாமல் இல்லை. கிராமக் குடிசைத் தொழில்கள் அப்போது அறவே வளர்ச்சி குன்றி இருந்தன வென்றாலும், பெரிய, நடுத்தரத் தொழில்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே இருந்தன. இப்போது இருப்பதைப்போல் பரவலான முறையில் விஸ்தாரமாக அமைந்திருக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன?

தொழில் வளர்ச்சியில் அப்போது விசேஷ அக்கறை எதுவும் காட்டப்படவில்லை. சென்னை, மதுரை, கோவை போன்ற முக்கியமான நகரங்களில் மட்டும் தொழில் வசதிகள் செய்து தரப்பட்டன. மற்றபடி நாடெங்கும் அவைகளை விஸ்தரிப்பதற்கான ஒரு சூழ்நிலையே நாட்டில் தோன்றவில்லை. காலனி ஆதிக்கத்தின்கீழ் நம் நாடு இருந்ததால், வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு இங்கு மார்க்கெட்டுகள்தான் உண்டாக்கப்பட்டனவே தவிர, இங்கேயே அந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய காலனி ஆதிக்கம் முன்வரவில்லை. ஆரம்பிக்கப்பட்ட தொழில்களுக்கு அரசாங்கமும் மிக மிகக் குறைந்த அளவிலேதான் உதவி செய்து வந்தது. மின்சாரப் பற்றாக்குறை, மூலப் பொருள்களான நிலக்

கரி, இரும்புப் பற்றுக்குறை ஆகியவை இருந்தன. அதோடு தொழில் வளர்ச்சிக்காக எந்த விதமான திட்டமிடப்பட்ட ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படாமையால் தொழில் வசதி என்பது கைக்கு எட்டாத கனியாகவே இருந்தது.

இந்த நிலையில் நாடு விடுதலை அடைந்தது. அரசாங்க நிர்வாகம் நம் கைக்கு வந்தது. அன்றிலிருந்து தொழில் துறையில் ஒரு புதுத் திருப்பம் தோன்றலாயிற்று. சுதந்திர அரசாங்கத்தின் தொழில் கொள்கை வகுக்கப்பட்டது. எங்கெங்கு இயற்கை வசதிகள் கிடைக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டது. அவைகளை எந்தெந்த முறைகளிலெல்லாம் பயன்படுத்தலாம் என்றும் திட்டமிடப்பட்டது. நாடு தொழில் துறையில் மிகவும் பின் தங்கியிருப்பதை அரசாங்கம் அறிந்தது போல் மக்களும் உணரத் தலைப்பட்டனர். வெகுகாலமாக மக்களின் உடலில் தேங்கியிருந்த சக்தியும், உள்ளத்தில் நிறைந்திருந்த ஆர்வமும் அரசாங்கத் தொழில் கொள்கைகளுக்கு ஒத்துழைப்பாக வந்து நின்றன. வெறிச்சோடிக் கிடந்த தரிசு நிலங்களில் தொழிற்சாலைகள் உருவாயின. கட்டிடங்கள் கம்பீரமாக எழுந்து நின்றன. தொழிற்சாலைச் சங்குகள் மக்களைத் தட்டி எழுப்புவது போல் பெரும் ஓசை செய்தன. அதன் பயனாக இன்று நம் தமிழ்நாடு, மஹாராஷ்டிரம், வங்காளம் ஆகியவைகளோடு வைத்து ஒப்பிடத் தக்க அளவுக்கு இந்திய நாட்டில் தொழில் துறையில் முன்னேறியுள்ளது. இதற்குமுன் நாம் கேட்டறியாத ஊர்களெல்லாம் இன்று இந்திய நாட்டில் பலகோடி மக்களால் பேசப்படுகின்றன. இத்தகைய ஊர்களில் ஒன்றுதான் நெய்வேலி.






# மண்ணுக்குள் பொன்

சுதந்திரத்திற்குப் பின் நம் தமிழ் நாட்டில் உருவான பெருந் தொழில்களில் ஒன்று நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டம். தென் ஆற்காடு மாவட்டத்தில் நெய்வேலிப் பகுதியில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி மண்ணுக்கடியில் கிடப்பதை ஆராய்ச்சி மூலம் அறிந்தோம். அந்த நிலக்கரியைத் தோண்டி எடுத்தால் அதன் மூலம் பெரிய அளவில் தொழில்களைப் பெருக்கமுடியும் என்றும் கண்டோம். உடனே அந்த வேலையில் ஈடுபட்டோம். திட்டம் வகுத்தோம். ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரித் தோண்டி எடுக்க இந்தத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவுத் தொகை சுமார் 86 கோடி ரூபாயாகும். நிலக்கரி தோண்டி எடுப்பதோடு இங்கே ஒரு மின்சார உற்பத்தி நிலையம், ரசாயன உரம் தயாரிக்கும் தொழிற்சாலை போன்ற உப தொழில்களையும் ஆரம்பிப்பதற்கு திட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. இந்த வேலை பூரணமாக முடிவடைய இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும். ஆனால் தொழில் சரித்திரத்தின் புதிய அத்தியாயம் 1957மே மாதத்தில் தொடங்கி விட்டது என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால்

அப்போதுதான் நிலக்கரி தோண்டி எடுப்பதற்கான ஆரம்ப வேலை தொடங்கியது.

இதே போன்ற பெரியதொரு தொழிற்சாலைதான் பெரம்பூரிலுள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலை. போக்குவரத்தின் அச்சாணியாக விளங்கும் ரயில்பெட்டிப் பற்றுக்குறை இத்தொழிற்சாலையால் வெயில்முன் பனிபோல் மறைகிறது. உலகத்திலுள்ள மிகப் பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்று. ரூ. 7.35 கோடி செலவு மதிப்பீட்டுடன் இந்தத் தொழிற்சாலை 1955 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 9 லட்சம் சதுர அடிப் பரப்பில் பெரிய 10 தொழிற்சாலைக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 7800 பேர்களுக்கு வேலை வாய்ப்பினைக் கொடுத்துள்ள இத்தொழிற்சாலை ஒவ்வொரு ஆண்டிலும் லட்சிய அளவுக்கு மேலேயே ரயில் பெட்டிகளைத் தயாரித்து வருகிறது. இப்போது இங்கு மாதமொன்றுக்கு 40 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் ரயில் பெட்டிகளின் வெறும் கூடுகளை மட்டும் தயாரிப்பதற்காக இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டது. பெட்டிகளுக்குள் தேவையான வசதிகளைச் செய்வதை வேறு தொழிற்சாலைகளில் வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடனேயே இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் நாளாவட்டத்தில் இந்த எண்ணம் கைவிடப்பட்டு எல்லா வசதிகளையும் செய்யக்கூடிய தொழிற்சாலையையும் இங்கேயே கட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கான தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் செலவு மதிப்பீடு ரூ. 3.69 கோடியாகும்.




# தனியார் துறையிலே

பெரிய தொழில்கள் என்னும் வரிசையில் மேற்சொன்ன இரண்டும் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டவையாகும். இதல்லாமல் தனியார் துறையிலும் தொழில்கள் வெகு வேகமாக வளர்ந்து வந்திருக்கின்றன. தொழில் வளர்ச்சி என்னும் வண்டியில் பூட்டப்பட்ட இரண்டு சக்கரங்கள் அரசாங்கத் துறையும் - தனியார் துறையும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இல்லாத பல தொழில்கள் தனியார் துறையில் தற்போது உண்டாகியிருக்கின்றன.



## சிமெண்ட்

தொழில் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானவை இரும்பும் எஃகும் ஆகும். இதற்கு அடுத்த முக்கிய ஸ்தானம் வகிப்பது சிமெண்ட். இப்போது நம் தமிழ் நாட்டில் மூன்று சிமெண்ட் ஆலைகள் உள்ளன. இவை 1934க்கும் 1946க்கும் இடையே நிர்மாணிக்கப்பட்டவை. இப்போது இத்தொழிற்சாலைகளில் சுமார் 4000 பேர் வேலை செய்கின்றனர். இம்மூன்று தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்பட்டபொழுது அவற்றின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 7.58 லட்சம் டன்களாக இருந்தது. இப்போது இது 8.13 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.



இவைகளல்லாமல் புதிதாக ராஜபாளையத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1.94 லட்சம் டன்களாகும். இத்தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.

இவைகளல்லாமல் மூன்றாவது திட்ட காலத்தில் இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதற்கு திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

## துணி உற்பத்தி

தமிழ் நாட்டின் முக்கியமான தொழில்களில் துணி நெய்தலும் ஒன்றாகும். துணி ஆலைகளில் இரண்டு விதங்களுண்டு. ஒன்று வெறும் நூல் நூற்கும் ஆலைகள்—மற்றொன்று நூல் நூற்பதுடன் துணி நெய்யும் ஆலைகள்.

இந்தியாவில் சுமார் 131 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. இவற்றில் 31 லட்சம் கதிர்கள் நம் தமிழ் நாட்டு ஆலைகளில் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள 2 லட்சம் தறிகளில் சுமார் 7350 தறிகள் மட்டுமே இங்கு உள்ளன. நூற்புக் கதிர்கள் இங்கு அதிகமாக இருப்பதற்குக் காரணம் இங்

குள்ள கைத்தறித் தொழிலுக்குப் பெரிய அளவில் நூல் தேவைப்படுவதே.

துணி ஆலேத் தொழிலில் கடந்த பத்து ஆண்டு களில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1951-ல் 71 ஆலேகள் இருந்தன. இவைகளில் 10.7 லட்சம் கதிர்களும், 7404 தறிகளும் இருந்தன. 1956-ல் 102 ஆலேகள் இருந்தன. இவைகளில் 20.17 லட்சம் கதிர்களும் 8016 தறிகளும் இருந்தன. தற்போது 134 ஆலேகள் இருக்கின்றன. இவற்றில் 25 ஆலேகள் நெசவும் செய்கின்றன. மொத்தம் எல்லா ஆலேகளிலும் 30.06 லட்சம் கதிர்களும் 7350 தறிகளும் உள்ளன. இவையன்றி புதிதாக 1 லட்சம் கதிர்கள் அமைக்க அரசாங்கம் அண்மையில் அனுமதியளித்ததின்பேரில் சுமார் 80,000 கதிர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1950-ல் 10.90 கோடி கெஜம் துணி உற்பத்தியாக்கப்பட்டது. ஆனல் 1960ல் உற்பத்தி 13.42




கோடி கெஜம். இத்தொழிலினல் 1950-ல் சுமார் 90,000 பேர்களுக்கு மட்டும் வேலே கிடைத்து வந்தது. இன்று சுமார் 1.20 லட்சம் பேர்களுக்கு வேலே கிடைத்து வருகிறது.

துணி ஆலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கீழ்க்கண்ட அட்டவணை தெளிவாக விளக்குகிறது.

| ஆண்டு | ஆலைகள் | கதிர்கள் | தறிகள் | உற்பத்தியாக்கப்பட்ட துணி | | |
|---|---|---|---|---|---|---|
| | | லட்சம் | | | | |
| 1951 | 71 | 10.70 | 7,404 | 10.98 | கோடி | செ. |
| 1955 | 85 | 20.12 | 8,566 | 14.15 | ,, | ,, |
| 1956 | 102 | 20.17 | — | 14.33 | ,, | ,, |
| 1957 | 121 | 20.14 | — | 14.49 | ,, | ,, |
| 1960 | 134 | 30.06 | — | 13.42 | ,, | ,, |

1960-ம் ஆண்டில் துணி உற்பத்தி குறைந்துவிட்டதற்குக் காரணம் பெரும்பாலான நெசவு ஆலைகள் நெசவைக் கைவிட்டுவிட்டு நூல் நூற்பை மட்டும் மேற்கொண்டன. காரணம், கைத்தறி வளர்ச்சியினால் அதற்குத் தேவையான நூல் தேவைப்பாடு அதிகமாகிவிட்டது.

# பொறியியல் தொழில்



தனியார் துறையின் கீழ் பல பொறியியல் தொழில்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. அவற்றுள் எண்ணூரில் உள்ள அசோக் லேலெண்ட் லிமிடெட் ஒன்று. மோட்டார் டிரக்குகள் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. இது 1950-ல் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலையில் 1955-ல் 350 பேர்கள்தான் வேலையில் இருந்தனர். இப்போது இந்த எண்ணிக்கை 1500க்கும் மேலே உள்ளது.

தனியார் துறை தொழில் அமைப்பில் குறுகிய காலத்தில் புகழ் பெற்றது சென்னைக்கு அருகாமையில் வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி. இதுவும் சுதந்திரத்திற்குப் பின் அதாவது 1950-ல் ஆரம்பிக்கப்பட்டதுதான். அப்போது இங்கே வேலையில் இருந்தவர்கள் 200 பேர்கள்தான். ஆனால் 1959-ல் 1600 பேர்கள் வேலை செய்துவந்தனர்.



சென்னைக்கு அருகில் உளள திருவொற்றியூரில் ராயல் என்பீல்ட் என்னும் மோட்டார் சைக்கிள் தொழிற்




சாலை 1955-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆரம்பத்தில் 250 நபர்கள் தான் உழைப்பு வேலையில் இருந்தனர். ஆனால் இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் உள்ளனர். கிழக்கத்திய நாடுகளில் ஜப்பானைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இதற்கீடான ஒரு தொழிற்சாலை இல்லை என்று சொல்லலாம்.



நான்காவதான முக்கிய தொழிற்சாலை அம்பத்தூரில் உள்ள டி. ஐ. சைக்கிள்ஸ் கம்பெனி. இது 1951-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1952-ல் இதில் வேலை செய்தவர் 283 பேர்கள்தான். இன்று இந்த எண்ணிக்கை எட்டு, ஒன்பது மடங்கு அதிகரித்துள்ளது. (1959-ல் 1682 பேர் வேலையிலிருந்தனர்).

## காகிதம் செய்வோம்

காகிதத் தொழிற்சாலை நம் தமிழ் நாட்டில் சமீப காலம் வரை இல்லை. ஆனால் தற்போது காகிதம் தயார் செய்வதற்கான தொழிற்சாலைகள் சில நிறுவப்படுகின்றன. இவற்றுள் ஈரோட்டுக்கருகில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை



முக்யமானதாகும். இங்கு ஆண்டு தோறும் 20,000 டன் காகிதம் உற்பத்தி செய்யப்படும். இதில் அரசாங்கம் ரூ. 1 கோடி மூலதனம் செய்ய முன் வந்துள்ளது.

ரெயான் என்னும் செயற்கைப்பட்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நிர்மாணிக்கப்பட்டு அண்மை யில் வேலை துவங்கிற்று. இங்கு ஆண்டுதோறும் 80 லட்சம் பவுண்டு செயற்கைப்பட்டுடன், சில ரசாயனப் பொருள்களும் தயாரிக்கப்படும். இத் தாலி நாட்டு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.

அம்பத்தூரிலுள்ள டன்லப் ரப்பர் கம்பெனி தனியார் துறையிலுள்ள இன்னொரு புகழ் வாய்ந்த தொழில் அமைப்பாகும். மேற்கூறிய தொழிற் சாலைகள் இன்று ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன.


இதிலுள்ள மற்றொரு முக்கியமான அம்சத்தை யும் நாம் கவனிக்க வேண்டும். இந்தத் தொழிற் சாலைகளில் வேலைசெய்வோர் ஒரு சில ஆயிரமே யானாலும், இந்தத் தொழிற்சாலைகளால் நாடெங் கிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை கிடைத்து வருகிறது. உதாரணமாக, அம்பத்தூர் சைக்கிள் கம்பெனியில் சுமார் 1700 பேர் வேலையில் இருக் கின்றனர். இந்தக் கம்பெனி 1959-ம் ஆண்டில் மட்டும் 2 லட்சம் சைக்கிள்கள் தயாரித்தது. இவை

கள் நாடெங்கும் விற்பனை செய்யப்பட்டதென்றால், எத்தனை சைக்கிள் கடைகள் ஏற்பட்டிருக்கும், அவைகளின் மூலம் எவ்வளவு பேருக்கு வேலை கிடைத்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 2 லட்சம் சைக்கிள் விற்பனையானது நம் மக்களிடையே ஏற்பட்டுள்ள வாங்கும் சக்தியையும் எடுத்துக் காட்டுகிறதல்லவா?

## கூட்டுறவு அடிப்படையில்...

கூட்டுறவு அடிப்படையிலும் நம் தமிழ்நாட்டில் பல தொழில்கள் வளர்ந்துள்ளன. அவைகளுள் சர்க்கரை ஆலைகள் முக்கியமானவையாகும். ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பின் தமிழ் நாட்டில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருந்தன. அவை தென் ஆற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம், திருச்சி மாவட்டம் புகளூர், மதுரை மாவட்டம் பாண்டிய ராஜபுரம் ஆகிய இடங்களில் அமைந்தவையாகும். இவை ஆண்டுதோறும் 50,000 டன் சர்க்கரை உற்பத்தி செய்து வந்தன. ஆனால் நமது தேவை 90,000 டன்களாகும். இரண்டாவது திட்ட காலத்தில் தஞ்சாவூர் மாவட்டம் வடபாதி மங்கலத்திலும், திருச்சி மாவட்டம் பேட்டைவாய்த்தலையிலும் இரு சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டன. இதனால் சர்க்கரை உற்பத்தி 85,000 டன்களாயிற்று. இவையல்லாமல் கோவை மாவட்டம் உடுமலைப்

பேட்டையிலும், வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் படாலத்திலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த சர்க்கரை ஆலைகள் அரசாங்க நிதி உதவியுடன் கூட்டுறவு அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் அரசாங்கம் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 55 லட்சம் பங்கு மூலதனமாகச் செலுத்தி நிதி உதவி செய்திருக்கிறது. இதல்லாமல் மேற்கொண்டு இரண்டு சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தனியார் துறையினர்க்கு அனுமதியளித்துள்ளது.



கூட்டுறவு அடிப்படையில் நூற்பு ஆலைகள் ஏற்படுத்தப்படுவதும் குறிப்பிடத் தக்கது. மூன்று கூட்டுறவு நூற்பு ஆலைகளில் அரசாங்கம் ரூபாய் 39 லட்சம் பங்கீடு செய்துள்ளது.


தொழில் வசதியைப் பெருக்குவதற்கான வாய்ப்புள்ள எல்லா தனியார் துறைத் தொழில்களிலும் அரசாங்கம் பங்கு மூலதனம் போட்டு வருகிறது. தனித் தொழில் அதிபர்களும் அரசாங்க உதவியைப் பெற எண்ணி புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது, பங்கு மூலதனத்தின் மூலம் உயர்ந்த பட்ச லாபத்தை பெறுவதோடு அதிக ஆட்களுக்கு வேலை தருவது ஆகியவை குறிப்பிடத் தக்க அம்சங்களாகும்.

# கடன் வேண்டுமா?



பங்கு மூலதனம் போடுவதோடு சிறு சிறு தொழில் அதிபர்களுக்கு அரசாங்கம் கடனுதவியும் அளிக்கிறது. இதுவரையில் (1956 செப்டம்பரிலிருந்து) 15,897 சிறு தொழில் அதிபர்களுக்கு ரூபாய் 109 லட்சம் கடனுகக் கொடுத்துள்ளது. இந்தக் கடன் நீண்ட காலத் தவணையில் செலுத்தப்படலாம். அரசாங்கம் தானே கடன் கொடுப்பதோடல்லாமல் கடனுதவி செய்யும் கார்ப்பரேஷன்களிலும் பங்கு மூலதனம் செலுத்துகிறது. அவைகளில் சென்னை தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷன் குறிப்பிடத் தக்கது. இதில் 102 லட்சம் ரூபாய் அரசாங்கம் பங்கு மூலதனமாகச் செலுத்தியுள்ளது. திரும்பும் திசைகளிலெல்லாம் இஞ்சினீயரிங் தொழில்களும், இதர சிறு தொழில்களும் தென்படுகின்றன வென்ருல் அதற்குக் காரணம் அரசாங்கத்தின் நிதி உதவிக் கொள்கை என்ருல் அது மிகையாகாது. இந்த உதவிகள் பாலைவனத்தில் பெய்த மழையைப்போல் வீணுவதில்லை. நன்செய் நிலத்தில் பெய்த பருவ மழைபோல் நல்ல பயனைக் கொடுக்கின்றன.

தொழில் அதிபர்களுக்குப் பண உதவி செய்வதால் மட்டும் தொழில்கள் வளர்ந்து விடுமா? நிச்சயமாக இல்லை. தொழிலை ஆரம்பிக்கத் தேவையான பல வசதிகளில் பண வசதியும் ஒன்று. அவ்வளவுதான். மற்றபடி 10,000 ரூபாய் மூலதனம் தேவையுள்ள ஒரு தொழிலில் 20,000



ரூபாய் போடுவதால் மட்டும் அந்தத் தொழில் வளர்ச்சியடைந்துவிட முடியாது. காரணம் தொழிற்சாலே அமைப்பதற்கென்று பொருத்த மான சூழ்நிலேகளமைந்த நல்ல இடம் வேண் டும். தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகி யவை இருக்கவேண்டும். அத்துடன் அந்தத் தொழிற்சாலேயில் உற்பத்தியாக்கப்பட்ட பொருள்களே வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லவும், வெளியிடங்களிலிருந்து மூலப் பொருள்களேத் தொழிற்சாலேக்குக் கொண்டு வரவும் ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் இருக்க வேண்டும். இந்த வசதிகள்தான் மிக முக்கியம். விதையை விதைத்து விட்டால் மட்டும் பயிர் வளர்ந்து விடாதல்லவா?

இந்த வசதிகளெல்லாம் தொழில் அதிபர் களுக்கு கிடைக்கச் செய்வது எங்ஙனம்? ஒவ் வொரு ஊரிலும் இந்த வசதிகளே ஏற்படுத்திக் கொடுப்பதென்பது இயலாத காரியம். அதற் குப் பதிலாக, குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந் தெடுத்து அங்கு பல வகைப்பட்ட தொழிற் சாலே யூனிட்டுகளே நிர்மாணித்து அவைகளே தொழில் அதிபர்களுக்குக் குறைந்த வாட கைக்கு விடலாம். அங்கு வந்து இடம் பெறக் கூடிய தொழில்களுக்குத் தேவையான ஆதார வசதிகளேயும், இயந்திரங்களேயும் பெற்றுத் தருவது காலத்தையும், பொருளேயும் விரைய மாக்காத ஏற்பாடல்லவா? அந்த நோக்கத்தில் எழுந்ததுதான் தொழில் பண்ணேகள் மற்றும் தொழில் காலனிகள் அமைக்கும் திட்டம்.

# பண்ணையும் காலனியும்

தற்போது நம் தமிழ் நாட்டில் இரண்டு இடங்களில் தொழில் பண்ணைகளும், ஆறு இடங்களில் தொழிற் காலனிகளும் இருக்கின்றன. இவை எல்லாவற்றிலும் சேர்த்து ரூபாய் 95 லட்சம் செலவில் 170 யூனிட்டுகள் கட்ட வேண்டுமென்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் லட்சிய அளவு வரையறுக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் ஆக்கமும், தொழில் வளர்ச்சியில் மக்களுக்குள்ள ஆர்வமும் சேர்ந்து இதுவரை 213 யூனிட்டுகளை நிர்மானித்துள்ளன. இதற்கான செலவு ரூபாய் 154 லட்சம்.

தொழிற் பண்ணைகளில் மிக முக்கியமானது கிண்டியிலுள்ள தொழிற் பண்ணை. இங்கு 128 யூனிட்டுகள் கட்ட வேண்டும் என்று திட்டமிட்டதற்கேற்ப அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அத்தனை யூனிட்டுகளும், தேவைப்பட்டவர்களுக்கு வாடகைக்கும் விடப்பட்டன. இப்போது இங்கே 1,200 பேர்கள் வேலையில் இருக்கின்றார்கள். இந்த ஆண்டு முடிவுக்குள் இங்கு 3,000 பேர்கள் வேலை செய்யும் நிலை ஏற்படவிருக்கிறது. இங்கே உள்ள சர்விசிங் கார்ப்பரேஷன் ரூ. 25.30 லட்சம் பெறுமானமுள்ள இரும்பைத் தொழிலதிபர்களுக்கு வாங்கி விநியோகித்துள்ளது. ஆண்டுதோறும் ரூ. 1½ கோடி



பெறுமானமுள்ள தொழில் நடைபெறுகிறது. அதே போல் விருதுநகரில் 15 யூனிட்டுகள் உள்ள தொழிற் பண்ணையும், மதுரையில் 18 யூனிட்டுகள், திருச்சியில் 22 யூனிட்டுகள், பேட்டையில் 12 யூனிட்டுகள், ஈரோட்டில் 7 யூனிட்டுகள், தஞ்சாவூரில் 6 யூனிட்டுகள், மார்த்தாண்டத்தில் 5 யூனிட்டுகள் கொண்ட காலனிகளும் கட்டப்பட்டு நிர்வாகத்திலிருந்து வருகின்றன. மற்றும் காட்பாடியில் 12 யூனிட்டுகள் கொண்ட ஒரு காலனி உருவாகி வருகிறது. சேலத்தில் 8 யூனிட்டுகள் கொண்ட ஒரு காலனி விரைவில் அமைக்கப்படும். ஒவ்வொரு யூனிட்டிலும் 8 முதல் 10 பேர்கள் வரை வேலைக்கமர்த்த தொழில் வசதிகள் உண்டு என்ருல் குறைந்த பட்சம் 2000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். இது இத்திட்டத்தின் தொடக்கமேயன்றி முடிவு அல்ல.

தொழில் பண்ணைகளும், காலனிகளும் இரண்டு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. முதலாவது பெரிய, நடுத்தரத் தொழில்களுக்குத் தேவையான உப கருவிகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. அடுத்து, மக்களுக்குத் தேவையான சில அத்யாவசியமான பொருள்களும் இங்கே உற்பத்தியாக்கப்படுகின்றன. இந்தப் பண்ணைகள் அமைக்கப்பட்டதன் மூலம் பல வழிகளில் தொழிலதிபர்களின் சிரமங்கள் குறைந்திருக்கின்றன. தொழிற் பண்ணைகளிலுள்ள தொழில் நுணுக்கத் தகவல் பிரிவுகள் அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளுக்குச் சிறந்த ஆலோசனைகளைக் கூறுகின்றன. இப்பிரிவுகளின் மூலம் இதுவரை சுமார் 5000 சிறு தொழிலதிபர்கள் பயனடைந்துள்ளனர். வெளிநாடுகளிலிருந்து நிபுணர்கள் அரசாங்கச் செலவில்

வரவழைக்கப் படுகின்றார்கள். இயந்திரங்கள் வாங்குவது, அவைகளைப் பொருத்துவது ஆகிய நுணுக்கமான விஷயங்களில் அரசாங்கத் தொழில் துறை சிறந்த ஆலோசனைகளைக் கூறுகிறது. விஸ்தரிக்கப்பட்ட இந்தத் தொழில் அமைப்பின் காரணமாக அரசாங்கத் தொழில் துறையில் தொழில் நிபுணர்களும், இதர அலுவலர்களும் அதிக அளவில் நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக மட்டும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 52.27 லட்சம் செலவழிக்கப்பட்டது. இனிமேல் சிறு தொழிலதிபர்கள் திக்குத் தெரியாத காட்டில் அலைவது போல் திகைக்க வேண்டாம். தொழிற் பண்ணை அவர்களுக்கொரு வரப் பிரசாதம்.

## சிறு தொழில்கள்

பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் ஆகியவற்றோடு சிறு ரகத் தொழில்களின் வளர்ச்சி குறித்தும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வற்புறுத்தப் பட்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சிக்காக 47 திட்டங்கள் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளுக்காக சுமார் ரூ. 3.96 கோடி செலவிடப்பட்டுள்ளது. 19 மாதிரி உற்பத்திப் பகுதிகள், 6 செய்முறைப் பயிற்சி நிலையங்கள், 19 பொது வசதிப் பட்டறைகள், 5 சமூக நல நிலையங்கள், 1 தொழில் நுட்பச் செய்தி அறிவிப்பு நிலையம், 1 கச்சாப் பொருள் டிப்போ, 11 விற்பனை டிப்போக்கள் ஆகியவை அமைக்கும் வேலைகள் இத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

## சித்திரக் கைத்தறி


இந்த இயந்திரத் தொழில்களைப் போலவே நம் தமிழ் நாட்டின் பூர்வீகமான கிராமக்கைத்தொழில்களும் இந்தப் பத்தாண்டுக் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி யடைந்துள்ளன. இத்தொழில்களில் ஒன்று கைத்தறித் தொழில். தமிழ் நாட்டிலுள்ள 134 துணி ஆலைகள் சில லட்சம் பேர்களுக்கே வேலை தருகின்றன. ஆனால் 4.66 லட்சம் கைத்தறிகளை நம்பி சுமார் 25 லட்சம் மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். காலனி ஆதிக்கத்தின் கீழ் கைத்தறிக்கும், துணி ஆலைக்கும் ஏற்பட்ட போட்டியில் கைத்தறித் தொழில் நசிந்து போயிற்று. ஆனால் சுதந்திர அரசாங்கம் இந்த நிலை நீடித்து நிற்க விடவில்லை. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935-ல் ஏற்படுத்தப்பட்ட போதிலும் அதன் வளர்ச்சி 1947-க்குப் பின்புதான் முழுமை பெற்றது. அதற்குப் பின்தான் நெசவாளர்களுக்கு இந்தச் சங்கத்தின் மூலம் கிடைக்கும் அனுகூலங்களைப் பூரணமாகப் பெற முடிந்தது. 1935-ல் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 98 தான். ஆனால், 1951-52 ல் 3600 ஆகும். அப்போது இந்தச் சங்கத்திற்குக் கிடைத்த லாபம் 600 ரூபாய் தான். ஆனால், 1958—59-ல் கிடைத்த லாபம் ரூ. 3.29 லட்சம் இத்தகையக் கூட்டுறவுச்

சங்கங்களை அமைப்பதற்கு அரசாங்கம் காட்டும் அக்கறை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளில் 2.23 லட்சம் தறிகள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. கைத்தறியில் நவீன முறைகளைக் கையாண்டு, தரத்திலும், உழைப்பிலும் சிறந்த துணிகளைத் தயாரிக்க அரசாங்கம் தொழில் நுணுக்க உதவிகளைச் செய்கிறது. அதற்கென விசேஷ அதிகாரிகளை அரசாங்கம் நியமிக்கிறது. சுமார் 73 ஆயிரம் நவீனக் கருவிகள் கைத்தறியாளர்களுக்கு இரண்டாவது திட்டக் காலத்தில் வழங்கப்பட்டன. ரக தயாரிப்புப் பயிற்சி நிலையங்களில் கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 600 நெசவாளிகளுக்குப் பயிற்சி யளிக்கப்பட்டிருக்கின்றது. சொந்தமாகத் தறி வைத்திராத நெசவாளிகளைக் கொண்டு, நெசவாளிகள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதை அரசாங்கம் தீவிரமாக மேற் கொண்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்தகைய சங்கங்கள் 6 நிறுவ வேண்டும் என்று திட்டமிட்டோம். ஆனால் 13 சங்கங்களை ரூபாய் 17 லட்சம் செலவில் அமைத்திருக்கிறோம்.

உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணியை விற்பனை செய்ய வேண்டுமல்லவா ? அதற்காக விற்பனை அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். இரண்டாவது திட்டக் காலத்தில் மட்டும் 36 விற்பனை நிலையங்கள்





இயங்கி வந்தன. இவைகளுள் 2 நிலையங்கள் மாநிலங்களுக்கு இடையேயான விற்பனை நிலையங்களாகும். இத்தகைய ஏற்பாடுகளால் நசிந்து, சீர்குலைந்து நாளா வட்டத்தில் மறைந்து விடுமோ என்று அஞ்சத்தக்க நிலையிலிருந்த கைத்தறித் தொழில் புத்துயிர் பெற்று, ஸ்திரமான பொருளாதாரத்தை அமைப்பதற்கு உதவியாக விளங்குகிறது.

## சுழலும் ராட்டைப் பின்னது



கைத்தறித் தொழிலைப் போலவே கதர்த் தொழிலும் நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்து வருகிறது. கதர்த் திட்டம் காந்திஜி நமக்கு அளித்த ஒரு வழி காட்டி. இந்தியாவில் உள்ள ஆறு லட்சம் கிராமங்களில் உள்ள மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் எனலாம். கிராம மக்களுக்குக் காந்திஜி அரசியல் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். ஆனால் அவர் கொடுத்த கைராட்டை இன்று அவர்களுக்குப் பொருளாதார சுதந்திரம் வழங்கி வருகிறது.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்பொழுது இது சாதாரணமான தொழிலாகத் தெரியும். ஆனால் இந்தியாவில் 15 லட்சம் மக்களுக்கு இத்திட்டம் தொழில் வசதி கொடுத்து வருகிறது. இந்தப் பதினைந்து லட்சத்தில் 5 லட்சம் மக்கள் நம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்



கள். பல துறைகளில் நம் தமிழ் நாடு இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருப்பதைப் போல் இத்துறையிலும் முன்னோடியாக விளங்குகிறது.

சுதந்திரத்திற்கு முன்பே காந்திஜி இந்த இயக்கத்தை ஆரம்பித்தார். அப்போது அது மந்த கதியிலேயே இருந்தது. 1947-க்கு பிறகுதான் இதில் ஒரு அசுர வேகம் தென்பட்டது. அந்த வேகம் முதன் முதல் நம் தமிழ் நாட்டில்தான் தோன்றியது. அதற்குக் காரணம் அரசாங்கத்தின் சீரிய முயற்சியே. தனித்தனிச் சங்கங்களின் கையில் இருந்த இந்தத் தொழிலை தமிழ் நாடு அரசாங்கம்தான் முதன் முதலில் அரசாங்கத் திட்டமாக மேற்கொண்டது. அப்போது (1947-ல்) 136 கிராமங்களில் மட்டும் இத் திட்டம் அமுலில் இருந்தது. 15,000 நூற்பாளர்கள் மட்டும்தான் இருந்தனர். ஆனால் இன்று எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டு விட்டது. 4 லட்சம் நூற்பாளர்களும், பத்தாயிரம் நெசவாளர்களும் உள்ளனர். சுருங்கச் சொன்னால் சுதந்திரத்திற்குப் பின் கதர்த் திட்டத்தின் மூலம் சுமார் 4½ லட்சம் மக்களுக்குப் புதிதாக வேலை கொடுக்க முடிந்திருக்கிறது.

கதர் கிராமக் கைத்தொழில் போர்டின் நிதி ஆதாரத்துடன் கதர்த் தொழில் வளர்ச்சி அடைந்துவருகிறது. இதற்கான திட்டம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது தீவிரக்






கதர்த் திட்டம். மாநிலத்தில் பொறுக்கியெடுத்த பகுதிகளில் மட்டும் இது அமுலில் உள்ளது. இங்கு சாதாரண ராட்டைகள், பருத்தி ஆகியவை மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் துணிகளை விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நோக்கங்களுக்காகப் பிரதான நிலையங்கள்—கிளை நிலையங்கள்—விற்பனை டிப்போக்கள் ஆகியவை மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்படுகின்றன. முதல் திட்ட முடிவில் 6 பிரதான நிலையங்களும், 37 கிளை நிலையங்களும், 6 விற்பனை நிலையங்களும் பணியாற்றி வந்தன. ஆனால் இரண்டாவது திட்டக் காலத்தில் மட்டும் புதிதாக 16 பிரதான நிலையங்களும், 75 கிளை நிலையங்களும், 33 விற்பனை டிப்போக்களும் அமைக்கப்பட்டன. முதல் திட்டக்கால முடிவில் 61 ஆயிரம் நூற்பாளர்களும், சுமார் 2500 நெசவாளர்களும் இருந்தனர். ஆனால் இரண்டாவது திட்டக்காலத்தில் 1.46 லட்சம் நூற்பாளர்களும், 7500 நெசவாளர்களும் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

அடுத்தது கதர் விஸ்தரிப்புத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் ராட்டைகளும், இதர உபகரணங்களும் மற்றும் பருத்தியும் மக்களுக்கு விநியோகிக்கப் படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இது தீவிரக் கதர்த்

திட்டத்துடன் ஒன்றாக இணைக்கப்பட்டு விட்டது. மூன்று வது, அம்பர் ராட்டைத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் அம்பர் ராட்டையில் நூற்பதற்கான பயிற்சி அளிக்கப்படு கிறது. ஏனெனில் அம்பர் ராட்டையில் நூற்பதற்கு சிறி தளவு விசேஷப் பயிற்சி வேண்டும். இத்திட்டமும் மேற் சொன்ன திட்டங்களோடு ஒன்றாக இணைக்கப்பட்டு விட் டது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு கதர்த் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு ரூ. 7.62 லட்சம்தான் ஊதிய மாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் 1960—61-ல் கொடுக்கப்பட்ட ஊதியம் சுமார் ரூ. 80 லட்சமாகும். கதர் துணிகளை விற்பனை செய்ய பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்தவை 10 விற்பனை நிலையங்கள். இன்று சுமார் 50 நிலையங்கள் இருக்கின்றன.

காந்திஜி கதர்த் தொழிலுக்கு நிறைய முக்யத்துவம் கொடுத்தார். அதனால் நம் காலத்தில் அது நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது. ஆனால் நாம் இதற்கு எவ்வளவு முக்யத்துவம் கொடுக்கிறோமோ அதைப் பொறுத்தே கதரின் எதிர்காலம் இருக்கிறது. கிடைத்த சுதந்திரத்தைப் பறி கொடுத்து விடுவோமா என்ற கருத் துப்பட பாரதியார் பாடியது போல், ஐந்து லட்சம் மக்க ளுக்கு வேலை கொடுக்கும் இத் தொழிலை நாம் அலட்சியப் படுத்தி விடுவோமா? நிச்சய மாக இல்லை.





# கை புனைந்தியற்றும் தொழில்


சுதந்திரத்திற்குப் பின் தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியில் மிகவும் முக்கியமானது கைவேலைத் தொழில், கிராமக் குடிசைத் தொழில் வளர்ச்சியாகும். கைவேலைப் பாடு நம் புராதனக் கலையையும்—பண்பாட்டையும் வெளிப்படுத்தும் உயர்ந்த தொழிலாகும். சுதந்திரத்திற்கு முன் இந்தத் தொழில் இருந்த சுவடுகூடத் தெரியவில்லை. கைவேலைத் தொழில் வினைஞர்கள் வேலையின்றி முடங்கிக் கிடந்தனர். அவர்களிடமிருந்த திறமை நாளுக்குநாள் குன்றி வந்தது. ஆனால் நாடு விடுதலை அடைந்ததும் அரசாங்கம் மற்ற தொழில்களைப் போலவே இதிலும் தனி அக்கறை காட்டியது. வேலையில்லாமல் இருந்த கைவேலைத் தொழில் வினைஞர்களுக்கு வேலை கொடுத்தது. பல பேர்களுக்குப் பயிற்சியும் கொடுத்தது இரண்டாவது திட்டக்காலத்தில் ஏற்பட்ட சில அபிவிருத்திகளைப் பார்ப்போம். இரண்டாவது திட்டக் காலத்தில் கைவேலைத் தொழில் வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 57.50 லட்சமாகும். கைவேலைத் தொழிலில் பயிற்சி, ஆராய்ச்சி, உற்பத்தி, விற்பனை ஆகியவைகளுக்காக 64 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 38 உற்பத்தி—பயிற்சி நிலையங்களும், 6 விற்பனை நிலையங்களும், ஒரு எம்போரியமும் ஆரம்பிக்கப்பட்டன. ஒதுக்கப்பட்டது ரூ. 57.50 லட்சம். ஆனாலும் செலவு மதிப்பீடு 25.91 லட்ச ரூபாயாகும்.

சுவாமி மலையிலும், மதுரையிலும் சிற்பத் தொழிலில் பயிற்சி யளிப்பதற்கான இரண்டு பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஏற்கனவே 12 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது. தற்போது 27 நபர்கள் பயற்சி பெற்று வருகின்றனர். மற்றும் கோயில் விளக்குகள், பெரிய மணிகள், கூஜாக்கள் ஆகியவைகள் தயாரிக்கும் தொழிலில் பயிற்சி அளிக்க தஞ்சாவூர் மாவட்டம் நாச்சியார் கோவிலிலும் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 30 பேர்கள் பயிற்சி பெற்றனர். தற்போது 15 பேர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இதே போல் காகித பொம்மை கள்—மற்றும் விதவிதமான காகிதத்தாலான பொருள்களைத் தயாரிப்பதிலும் பயிற்சி அளிக்க தஞ்சாவூரிலும்—பன்ருட்டியிலும் இரு பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு நிலையங்களிலும் 27 தொழில் வினைஞர்கள் பயிற்சி பெற்று முடித்துள்ளனர். குறைந்த வருமானமுள்ள படித்த பெண்களின் நன்மைக்காக நூல் பின்னல் வேலை, லேஸ் தயாரிக்கும் வேலை ஆகிய வற்றை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டது. இதற்காகத் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட் டையில் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. மொத்தம் 30 பெண்கள்வரை இதில் பயிற்சி







பெற்றுள்ளனர். இவர்களைக் கொண்டு பெண்கள் குடிசைத் தொழில் சங்கம் என்ற ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதே அடிப்படையில் வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜாப் பேட்டையிலும் பிரம்பு சம்பந்தமான பொருள்கள் தயாரிப்புத் தொழில் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அதில் 14 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களைக் கொண்டு ஒரு கூட்டுறவுச் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் பிரம்புக் கூடைகள் முதலிய பொருள்களை உற்பத்தியும் செய்கிறது.




மதுரை மாவட்டம் தாத்தநேரியிலும் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு மூங்கிலினாலான பொருள்களைத் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. திட்டக் காலத்தில் இப்பயிற்சியாளர்களைக் கொண்டு ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டது. கண்ணாடி வளையல் தொழில் அபிவிருத்திக்காக சேலம் மாவட்டம் நெடுமாறதியில் ஒரு நிலையம் ஆரம்பிக்கப் பட்டது. அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள வினைஞர்களுக்குக் கச்சாப் பொருள்கள் விநி






யோகிக்கவும், தொழில் நுணுக்கச் சம்பந்தமான ஆலோசனைகள் கூறவும் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இத்துடன் இந்நிலையத்தில் 24 நபர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

நாகரிகமான தோல் சாமான்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. நம் மக்களுக்கு அதில் தனித் திறமையும் இருக்கிறது. இதை மேலும் வளர்ப்பதற்காகவும், அதே சமயத்தில் உற்பத்தியைப் பெருக்கவும் செங்கற்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 23 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்போது இந்த நிலையம் கிண்டி தொழிற் பண்ணைக்கு மாற்றப்பட்டு விட்டது. இளையான் குடியிலும் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 12 மாணவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.



கம்பளி, ஜமுக்காளம், இதர கெட்டித் துணிகளில் தரமான துணிகளை உற்பத்தி செய்வதற்காகவும், அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் திருச்சி மாவட்டம் கோலக்குடியில் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை இந்த நிலையத்தில் 36 மாணவர்கள் பயிற்சி முடித்துள்ளனர். தற்போது 12 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். மாமல்லபுரச் சிற்பங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவைகளை அப்



படியே பிரதிபிம்பமாகச் சமைத்து, விற்கப்படும் பொருள் களுக்கு நல்ல கிராக்கி இருப்பதால் அந்தக் கலையை மேலும் ஊக்குவிப்பதற்கு மாமல்லபுரத்தில் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதேபோல் சிற்ப வேலைப் பாடுத் தொழிலில் பயிற்சி யளிப்பதற்காகவும் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இரு நிலையங்களிலும் 20 நபர்கள் பயிற்சி பெற்றனர். அவர்களில் பெரும் பாலோர் மாமல்லபுரத்திலும், அதை ஒட்டியுள்ள பகுதிகளிலும் வசிப்பவர்களாவார்கள். இவையல்லாமல் உலோகச் சிற்பத் தொழில், வெண்கலப் பாத்திரத் தொழில், கற்ருழை நார்ப் பொருள்,பனையோலைப் பொருள் உற்பத்தித் தொழில் ஆகிய பலதரப்பட்ட தொழில் களுக்கு ஆக்கம் அளிப்பதற்கான உற்பத்தி—பயிற்சி நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.


கைவேலைத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் முக்கியமான நோக்கம் இதுதான். முதலாவது அது ஒரு குடிசைத் தொழில் ரீதியில் இயங்க வேண்டும். இரண் டாவது எங்தெந்தப் பகுதிகளில் இந்தத் தொழில்கள் நசிந்து இருக்கின்றனவோ அங்கேயே இந்தத் தொழில் களைப் புதுப்பித்து அமைக்க வேண்டும். அதுவும் உள்ளூர் தொழில் இளைஞர்களைக் கொண்டே இந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்பதுதான். உதாரண மாக, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடையநல் லூரில், சுங்கிடிச் சேலை அச்சுத் தொழில் பிரசித்தம் வாய்ந்தது. இதை மேலும் பிராபல்யப் படுத்துவதற்காக ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 20 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் அனை வரும் உள்ளூர் வாசிகளே ஆகும். இவ்வாருக சீர் குலைந்திருந்த பல தொழில்களுக்குப் புத்துயிர் கொடுத்த

தும், பல தொழில் வினைஞர்களுக்கு வேலை கொடுத்ததும் அரசாங்கத்தின் உயர்ந்த சாதனைகளே ஆகும்.

கைவேலைத் தொழில் மூலம் உற்பத்தியாக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கும் ஒரு ஏற்பாடு வேண்டுமல்லவா ? அதற்காக, திருநெல்வேலி, தஞ்சாவூர், கோவை, சேலம், ராமேஸ்வரம் ஆகிய ஐந்து இடங்களிலும் ஒவ்வொரு விற்பனை டிப்போவும், மதுரையில் ஒரு எம்போரியமும் ஆரம்பிக்கப்பட்டது. ரூபாய் 2.50 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் இந்த டிப்போக்களின் மூலம் விற்பனையாகி இருக்கின்றன.


எளிய முறையில் செய்யக்கூடியத் தொழில்களில் கயிறு தயாரிப்பதும் ஒன்று. கன்னியாகுமரி, தஞ்சாவூர், ராமநாதபுரம், தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதற்காகத் திட்டக் காலத்தில் ரூபாய் 12 லட்சம் வரை செலவழிக்கப்பட்டது. 13 கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

# பட்டுப் பண்ணை



பட்டு தயாரிப்பு ஒரு நுணுக்கமான தொழில். இதன் வளர்ச்சிக்காக 19 திட்டங்கள் இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. செலவு ரூபாய் 7 லட்சம் என்று மதிப்பிடப்படுகிறது.

தென்காசிப் பகுதியிலுள்ள குடியானவர்களுக்கு முசுக்கொட்டை பயிரிடக்கூடிய வேலை வாய்ப்புக் கொடுத்தால் அது அவர்களுக்கு லாபகரமாக இருக்குமென்று அரசாங்கம் கருதியது. ஆகவே தென் காசியில் ஒரு அரசாங்க செய்முறைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் 22 விவசாயக் குடும்பங்கள் முசுக் கொட்டை பயிரிடுவதை ஓய்வு நேர வேலையாக மேற்கொள்ள முடிந்தது. மாசாணக்குடியிலும் இத்தகைய ஒரு பண்ணை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் பல வகைப்பட்ட விஞ்ஞான நிலையங்களில் அறுவை சிகிச்சைக்கு மென்மையான நரம்புகள் அதிகம் தேவைப்படுகின்றன. இந்த நரம்புகளைத் தயாரிக்க கூனூரில் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இது சுமார் 10 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அகில இந்தியாவிலும் இத்தகைய பண்ணைகளில் இதுவே முதலாவது. இந்த நிலையத்தில் திட்



டக் காலத்தில் 7.49 லட்ச நரம்புக் கண்டுகள் தயாரிக்கப்பட்டன.

தென் காசியைப் போலவே வேப்பணபள்ளி, ராயக்கோட்டை பகுதிகளிலும் முசுக்கொட்டை வளர்ப்புக்கு ஏற்ற நல்ல சூழ்நிலைகள் தென்படுகின்றன. ஆகவே இங்கும் முசுக்கொட்டை வளர்ப்புத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. 131 விவசாயக் குடும்பங்கள் முசுக்கொட்டை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. ஏற்கனவே சொன்னதுபோல் கூடலூர் தாலூகா மாசானக்குடியிலும் பட்டு வளர்ப்புத் தொழில் விஸ்தரிக்கப்பட்டது. 77 விவசாயக் குடும்பங்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இதிலிருந்து பட்டு அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் இன்னும் பல விவசாயக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க முடியுமென்று தெரிகிறதல்லவா? உற்பத்தியாக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கும் ஒரு ஏற்பாடு வேண்டுமல்லவா? அதற்காக சேலம் மாவட்டத்தில் ஒரு விற்பனைச் சங்கத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. பட்டு நெசவாளர்களைக் கூட்டுறவு அடிப்படையின் கீழ்க் கொண்டு வருவதிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இரண்டாவது திட்டக் கால முடிவில் 3,100 பட்டு நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்புகளின்கீழ் இருந்தனர். கூட்டுறவு அமைப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படும் நெசவாளர்கள் ஆரம்பத்தில் பங்குமூலதனம் செலுத்த வேண்டுமல்லவா! அதற்காக ஒவ்வொரு பட்டு நெசவாளிக்கும் ரூபாய் எண்பத்தெட்டும், ஒவ்வொரு செயற்கைப் பட்டு நெசவாளிக்கும் ரூபாய் இருபத்திரண்டும் கொடுக்

கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கத்திலுள்ள ஒவ்வொரு தறியின் பெயரிலும் ரூபாய் 200 மூலதனக் கடனாகவும் கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் பல குடிசைத் தொழில்களைப்போல பட்டுத் தொழிலும் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து வருகிறது.

## தொழிற் பயிற்சி


நாடு விடுதலை அடைந்தபின் முதல் திட்டக் காலத்திலும், பின்னர் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் தொழில்கள் பெருகி விட்டன. அதற்கேற்ப தொழிலாளர்கள் எண்ணிக்கையும் உயர்ந்து விட்டது. தொழில்களில் விசேஷப் பயிற்சி கொடுப்பதற்கான ஆக்க வேலைகள் இக்காலத்தில் மேற்கொள்ளப் பட்டன. 1957—58 ல் கடலூர், நாகப்பட்டினம், விருதுநகர், பேட்டை ஆகிய நான்கு இடங்களிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இப்போது ஆண்டு ஒன்றுக்கு 3168 நபர்களுக்குப் பயிற்சி தர இங்கு வசதி இருக்கிறது.

தொழிலாளர்களுக்கு, கணக்கு, அடிப்படையான வர்த்தகக் கொள்கைகள் ஆகியவைகளைப் போதிக்கவும், தொழிற் கருவிகளை உபயோகிக்கும் பயிற்சி தரவும், கிண்டியில் மாலை வேலைகளில் தொழிற் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இரண்டாவது திட்டக் காலத்தில் இவ்வகுப்புகளின் மூலம் 400 தொழிலாளர்கள் பயன் பெற்றிருக்கின்றனர். மேலும் அப்ரண்டிஸ் பயிற்சித் திட்டமும் தற்பொழுது அமுலில் இருந்து வருகிறது. இதன்படி தொழில் நிறுவனங்களில் அப்ரண்டிஸ்களாக இருந்து பயிற்சி பெறுவதற்கு தகுதிவாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதற்கென்று ஒரு தனிக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் 310 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.




இத்தகைய சிறு அளவிலான தொழில்களில் அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்துவதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தொழில்களுக்குச் செலவிடப்படும் தொகையை வைத்துப்பல பெரிய தொழில்களை ஆரம்பிக்க முடியும். அதற்கான சூழ்நிலைகளும் இல்லாமல் இல்லை. உதாரணமாக, மூன்றாவது திட்டத்தை எடுத்துக் கொண்டால் பல கனரகத் தொழில்கள் ஆரம்பிக்கப் படவிருக்கின்றன. நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இரும்புத் தாதுக்கள் இருப்பதாக நமக்கு ஆராய்ச்சியின் மூலமாகத் தெரியவந்தது. பல கோடி ரூபாய்களை முதலீடு செய்து அவைகளைத் தோண்டி எடுக்கத் திட்டமிட்டுள்ளோம். அதே போல் உதகமண்டலத்திலுள்ள கச்சா பிலிம் திட்டமும் ஒரு பெரிய தொழிலை நிறுவவல்லது. ரூபாய் 5 கோடி இதற்காகச் செலவாகும்.

சோப்பு, காகிதம் ஆகியவைகள் தயாரிக்கவும், துணி ஆலைகளில் பயன்படவும் காஸ்டிக் சோடா உபயோகமாய் இருக்கிறது. இதைத் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலைகள் மேட்டூரிலுள்ள மேட்டூர் கெமிகல் தொழில் கார்ப்பரேஷன் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் சாஹுபுரத்திலுள்ள திராங்கதரா கெமிகல் தொழிற்சாலையும் ஆகும். மேட்டூர்த் தொழிற்சாலை 7000 டன் காஸ்டிக் சோடா உற்பத்தித்



திறன் கொண்டது. திராங்கதரா தொழிற்சாலை 60,000 டன் உற்பத்தித் திறன் கொண்டது. ஆனால் தற்போது இத்தொழிற்சாலையில் 30,000 டன்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கொண்டு 30,000 டன் உற்பத்தி செய்வதற்காக அரசாங்கம் இத்தொழில் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியிருக்கிறது.

கிண்டிக்கருகாமையில் நந்தம்பாக்கத்தில் ரண சிகிச்சைக் கருவித் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இது மத்திய அரசாங்கத் திட்டமாகும். ஆண்டுதோறும் இங்கு 20 லட்சம் உபகரணங்கள் தயாரிக்கப்படும். 2 ஆயிரம் நபர்களுக்கு இத்தொழிற்சாலையிலே வேலை கிடைக்கும். அதுமட்டுமல்ல, கிண்டியிலேயே டெலி பிரிண்டர் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அதுவும் மத்திய அரசாங்கத்தின் திட்டமாகும். இங்கு 200 பேர்களுக்கு வேலை கிடைக்கும். அரசாங்கம் தானகவே தொழிற்சாலை ஆரம்பிப்பதோடு நில்லாமல் பல தனியார் துறையினர்க்கும் நிதி உதவி செய்யப்போகிறது. தனியார் துறையின்கீழ், மேட்டூரில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை அமையவிருக்கிறது. இந்தத் தொழிற்சாலை முதலில் அரசினர் துறையில் ஆரம்பிக்கப்படுவதாகத் திட்டமிடப்பட்டது. ஆனால் வேறு பல பெரிய தொழில்களில் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தவேண்டி ஏற்பட்டதால் இது தனியார் துறைக்கு விடப்பட்டது. இருந்த போதிலும் அரசாங்கம் இதில் விசேஷ அக்கறை காட்டி வருகிறது. ஏனென்ருல் முதலாவதாகச் சேலம் மாவட்டத்தில் உள்ள பரவலான வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க வேண்டும். இரண்டாவதாக சேலம் சேர்வராயன் மலைப் பகுதிகளில்

சுமார் 40 அல்லது 50 லட்சம் டன் பாக்சைட் இருப்ப தாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்க வழி இருப்பதால் இதை அலுமினியமாக மாற்றுவது லாபகரமானதாக இருக்கும் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இங்கு வெறும் அலுமினியம் மட்டுமின்றி, அலுமினியத் தகடுகள்—குழாய்கள் ஆகியவைகளும் தயாரிக்கப்படும். இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 12.9 கோடியாகும். இதில் அரசாங்கம் 1.5 கோடி ரூபாய் பங்கு மூலதனம் செலுத்தவிருக்கிறது.

இவ்விதமாகக் கனரகத் தொழில்கள் மிகப் பெரிய அளவில் விஸ்தாரமடைந்து வருகிறபோது ஏன் சர்வ சாதாரணமான கிராமக் குடிசைத் தொழில்களில் அர சாங்கம் நாட்டம் செலுத்த வேண்டும்?

வேலை வாய்ப்பு செய்து கொடுப்பதென்பது நினைத்த நேரத்தில் நடந்து விடக் கூடியதல்ல. அதற்கென்று பல பெரிய தொழிற்சாலைகளைக் கட்ட வேண்டும். அதற்கு சிறிதளவு காலம் பிடிக்கும். அதுவரையில் மக்கள்—அதிலும் குறிப்பாகக் கிராமப்புற மக்கள் என்ன செய் வார்கள்? அவர்களுக்குத் தெரிந்த சில தொழில்களை மேற்கொள்வதற்கேனும் வசதி யிருந்தால் அது அவர் களுக்கு எவ்வளவோ பெரிய உதவியாய் இருக்கும் அல்லவா? கதர் திட்டத்தின் மூலம் கண் தெரியாத ஒரு கிழவி வாரத்திற்கு 3 ரூபாய் சம்பாதிக்க முடியும் என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கதர்த் திட்டம் இல்லா விட்டால் அந்த 3 ரூபாயும் எங்கிருந்து கிடைக்கும்? ஆகவேதான் அரசாங்கம் இந்தச் சிறு சிறு தொழில்களிலெல்லாம் கவனம் செலுத்துகிறது. அதனை

மக்கள்—குறிப்பாகக் கிராம மக்கள் நன்ருக அறிந்து கொள்ள வேண்டும்.

உழைக்கக் கூடியவர்களுக்கு வேலையில்லையென்ற நிலை நம் நாட்டில் இன்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. இந்த நிலை அடியோடு மாற வேண்டுமானுல் அது மக்கள் கையிலே தான் இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு தொழில் செய்யக் கூடியவர்கள் ஒன்ருகச் சேரலாம். அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்க லாம். பயிற்சி நிலையம் ஆரம்பிக்கச் செய்யலாம். அதையே உற்பத்தி நிலையமாகவும் மாற்றிக் கொள்ள லாம். பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கலாம். உற்பத்தியான பொருள்களை விற்க, விற்பனை நிலையங்கள் வேண்டு மென்று கேட்கலாம். இவைகளெல்லாவற்றையும் செய்து தர அரசாங்கம் காத்திருக்கிறது.

ஆலையின் சங்குகள் ஒரு புறத்தில் ஒலிக்கட்டும். அதே சமயத்தில் ராட்டையின் ஒலியும் காற்றில் மிதந்து செல்லட்டும். மாமல்லபுரத்திலே சிற்பங்கள் செதுக்கப் படும் ஓசையும் நாடெங்கும் கேட்கட்டும். அதற்காக அரசாங்கத்தோடு சேர்ந்து உழைக்க மக்களும் முன் வர வேண்டும்.

அரசாங்கம் தரும் உதவிகளை உயர்ந்த பட்சம் அதிக மாகப் பயன்படுத்தக் கூடியவர்கள் தமிழ் நாட்டு மக்கள் தான் என்பது பாரதம் அறிந்த உண்மை. அந்த உதவி களை இனியும் நிரம்பப்பெற்று, பூரணமாகப் பயனடைந்து ஒரு தொழில் யுகத்தையே சிருஷ்டிப்போம். அதிலும் தமிழ்நாடுதான் முன்னிலையில் இருக்கிறது என்பதையும் நாடறிந்த உண்மை ஆக்குவோம்.

தமிழ்நாடு அரசாங்க செய்தித்துறை வெளியீடு

PRINTED BY PRASAD PROCESS ( PRIVATE ) LTD. MADRAS - 26.